பக்கங்கள் 16

# மாலை முரசு

## கைதான நால்வரும் பொலிஸ் பிணையில்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதிக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்டம் செயலகத்துக்கு அருகில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டு அத்துமீறி நுழைய முற்பட்டமை தொடர்பில்

04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 20 வெள்ளிக்கிழமை 05.01.2024 அதிர்வு 158



# வவுனியாவில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இருவர் கைது!

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் ஜனாதிபதியின் வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட – காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் – இருவர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வன்னி மாவட்டங்களுக் குரிய மாவட்ட அபிவிருத்தி குழு

04▶

# அறவிடப்பட வேண்டிய வரி நிலுவை கடந்த ஜூனில் 94,300 கோடி ரூபா

## நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்



கடந்த 30 ஜூன் 2023 நிலைவரப்படி அரசுக்கு அறவிடப்பட வேண்டிய வரி நிலு வைகள் மட்டும் 94 ஆயிரத்து 300 கோடி ரூபா உள்ளது. பல்வேறு காரணங்களால் 76 ஆயிரத்து 700 கோடிரூபாவை மீட்க முடியவில்லை. உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் வரிப் பாக்கியிலிருந்து 3 ஆயிரத்து 700 கோடி ரூபாவை அறவிட முடிந்துள்ளது.

04▶

# மொட்டுவை ஆதரிக்கும் அளவுக்கு மக்கள் எவரும் முட்டாள்கள் அல்லர்

## ராஜபக்ஷக்களின் அடியாள்கள் மாத்திரமே அக்கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்று பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஆதரிக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் எவரும் முட்டாள்கள் அல்லர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறு கையில்,

"நாட்டில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா

04▶

# கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் மயங்கிச் சாவு

## யாழ்ப்பாணத்தில் துயரம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மயங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய அமலசூரி அன்ரனியூட் என்ற 5 பெண் பிள்ளைகளின் தந்தையே சாவடைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் உட்பட மூவர் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கடற்றொழிலுக்குச் சென்றனர்.

இதன்போது அமலசூரி அன்ரனியூட் திடீரென மயக்கமடைந்துள்ளார். அவருடன் சென்றவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சேர்த்தனர்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழில் கிணற்றில் வீழ்ந்து 96 வயது மூதாட்டி மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 96 வயதான மூதாட்டி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி மூதாட்டி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு முயன்ற வேளை கால் தவறி கிணற்றினுள் வீழ்ந்து சாவடைந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# யானை தாக்கி இளைஞர் சாவு

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம், வெலிக்கந்தை பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி இளைஞர், காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்த வேளை யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

28 வயதுடைய வசந்த பண்டார என்ற நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# மண்மேடு சரிந்ததால் போக்குவரத்து பாதிப்பு

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பசறை - மட்டக்களப்பு பிரதான வீதியின் லுணுகலைப் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக அந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இந்தநிலையில் அந்த வீதியை வழமைக்குக் கொண்டு வரும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.





# மின் கட்டணத்தை இம்மாதம் குறைப்பதற்குத் தீர்மானம்!

இந்த மாத இறுதியில் மின்சாரக் கட்டணத்தை 50 வீதத்தால் குறைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் மின்சாரக் கட்டணம் 18 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அனுமதியின் அடிப்படையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் தொகையை 50 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் நோயல் பிரியந்த இதனைத் தெரிவித்துள்ளர்.

நாட்டில் தற்பொழுது நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் வறுமையில் 55 லட்சம் மக்கள் உள்ளனர்!

## தொகை மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் தகவல்



இலங்கையில் கடும் வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை ஐம்பத்து ஐந்து லட்சமாக அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் வரிச்சுமை காரணமாக கடுமையான வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை இவ்வாறு அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 25 லட்சமாகக் காணப்பட்டது.

மொத்த சனத்தொகையில் 25 வீதமானவர்கள் வறிய மக்கள். இது மொத்த சனத்தொகையில் 11.9 சதவீதம் என்பதுடன் தற்பொழுது இந்த எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன்புரித் திட்டங்களை வழங்க வேண்டியவர்களின் எண்ணிக்கை 25 வீதமாக உயர்வடைந்துள்ளது.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட சுமார் 80 பண்டங்களுக்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படுவதால் வறிய மக்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது.

மெய்யான வறிய மக்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக்கூடும் என்று தொகை மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்றாண்டு காலப் பகுதியில் நாட்டின் வறிய மக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளம் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியில் கரம்பை பகுதியில் இன்று காலை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி, கரிக்கட்டை பகுதியைச் சேர்ந்த விஜேசிங்க ஆராச்சிகே சஞ்சீவ அனுர மங்கள குமார (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இவர் இராணுவ விசேட படையணியின் சார்ஜண்ட் மேஜராக கடமையாற்றி ஓய்வுப்பெற்றவர். இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவியை நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்றும், எதிர்த் திசையில் பயணித்த லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த – ஓட்டோவில் பயணித்த – இந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரழந்த நபரின் மரண விசாரணையை புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் நடத்தினார். தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சடலம் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்துடன் தொடர்புடைய சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிலாபம் விபத்தில் சிறுமி உயிரிழப்பு

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – சிலாபம் வீதியின் கட்டுவ பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பாரவூர்தி அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் அவரது மகளும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மகள் உயிரிழந்துள்ளார்.

கட்டுகெந்த தங்கொடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

# சுகாதார சேவைகளின் மற்றோர் அதிகாரி கைது

சுகாதார சேவைகளின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஹேரத்குமார இன்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்

இன்றைய தினம் பிற்பகல் சுகாதார அமைச்சின் வளாகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இன்று மாலை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அறவிடப்பட...

உள்நாட்டு வருவாய்த் திணைக்கள (ஐ.ஆர்.டி) அதிகாரிகள் சமீபத்தில் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்களுக்கான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவிடம் இத்தகவலைத் தெரிவித்திருக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் வரி அறிக்கைகளைப் பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். வரி அறிக்கையைப் பெற்ற பிறகு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய பொறிமுறை அமைப்பில் தகவலை உள்ளிட்டு சிக்கல்களைக் கண்டறிவார்.

பின்னர் தணிக்கை நடத்தப்படும். சில சந்தர்ப்பங்களில், கூடுதல் தகவல்கள் விளக்கமாக கோரப்பட்டன. இதுபோன்ற தகவல்கள் கோரப்பட்டபோது, வரி செலுத்தாதவர்கள் வேண்டுமென்றே தாமதப்படுத்துகின்றனர் என அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

தற்போதுள்ள சட்டங்களின்படி, வரி அறிக்கையை தணிக்கை செய்ய அதிகாரிகளுக்கு 30 மாதங்கள் அவகாசம் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். வரி செலுத்துவோர் ஆணையாளர் நாயகத்திடம் முறையிட்ட பின்னர் மேலும் 24 மாதங்கள் அவகாசம் அளிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

மேன்முறையீட்டு காலம் மிக நீண்டது என்றும், அதை ஆறு மாதங்களாக குறைக்க வேண்டும் என்றும் குழு கருதியது. எவ்வாறாயினும், தணிக்கைக்கான 30 மாத கால அவகாசம் அப்படியே இருக்க வேண்டும் என்று குழு ஆலோசித்த பிறகு முடிவு செய்தது.

எவ்வாறாயினும், தேவைப்பட்டால் வர்த்தமானி மூலம் காலத்தை மாற்றுவதற்கு நிதி அமைச்சருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்று கூறப்பட்டது.

### கைதான...

நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நால்வரும் விடுவிக்கப்பட்டனர்.

நால்வரிடம் பொலிஸார் வாக்குமூலத்தைப் பெற்றுவிட்டு பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்ட நிலையில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் பஸ்ஸில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

### மொட்டுவை...

பொதுஜன பெரமுன வெற்றி பெறாது. அந்தக் கட்சியை ஆதரிக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் எவரும் முட்டாள்கள் அல்லர். எனினும், ராஜபக்ஷக்களின் அடியாட்கள் மாத்திரம் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். ஆனால், அடியாட்களின் வாக்குகள் மூலம் பொதுஜன பெரமுன வெற்றியடைய முடியாது. பெருமளவிலான மக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரண்டு வருகின்றார்கள்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். அதனூடாகவே மக்கள் அலையைத் தக்கவைக்க முடியும்.” – என்றார்.

### வவுனியாவில்...

கூட்டம் வவுனியாவில் இன்று நடைபெற்றது.

இதன்போது காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிலர் ஜனாதிபதியை காண்பதற்காக நகரசபை வீதியூடாக உள்நுழைய முற்பட்டுள்ளனர். இதன்போது அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் இரு பகுதியினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இதனையடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதி ஓரமாக நின்று கறுப்புத் துணிகளுடன் தமது பிள்ளைகளைக் கோரி கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது நீதிமன்ற கட்டளையைக் காட்டி அவர்களை அங்கிருந்து பொலிஸார் கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர். எனினும் தாம் ஜனாதிபதியை சந்திக்க வந்துள்ளோம், அதற்கு அனுமதிக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரியமையுடன், கோசமும் எழுப்பினர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவரும், அவர்களுடன் இணைந்து அதனை காணொலிப் பதிவு செய்த யுவதி ஒருவரும் என இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி சிவானந்தன் ஜெனீற்றா மற்றும் மீரா ஜாஸ்மின் ஆகியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதனையடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து கண்ணீருடன் கலைந்து சென்றனர்.

# வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக மக்களை ஏமாற்றிய முகவர் கைதானார்!

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றிய போலி வேலை வாய்ப்பு முகவர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க, சீதுவ, நீர்கொழும்பு, நுவரெலியா மற்றும் ஜா எல பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 100 பேருக்கு இத்தாலியில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி அந்தச் சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தேக நபர் தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த சில தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் கஹதுடுவ பிரதேசத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் சொகுசு வாகனங்களை பயன்படுத்தி மிகவும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இவர், முன்னரும் வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாகக் கூறி மக்களிடம் பண மோசடி செய்த குற்றச்சாட்டில் நான்கரை வருடங்களாக விளக்கமறியலில் இருந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மினுவாங்கொட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# இந்தியப் பாடல் போட்டியில் வெற்றிபெறுவோர் முறையாகச் சங்கீதம் கற்றுச் சிறக்க வேண்டும்!

## கேரளா பாலக்காடு பாடகர் ஸ்ரீராம் தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

இந்திய தொலைக்காட்சியில் வருடத்துக்கு வருடம் பாடல் போட்டிகள் நடைபெறுகின்றன. இப்படி பல பாடல் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தில் தெரிவானவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள். அவர்களை முறையாகச் சங்கீதம் படிக்க வைத்து எதிர்காலத்தில் சிறந்து விளங்க ஆவண செய்ய வேண்டும். தொலைக்காட்சி இலாபத்துக்காக இப்படியான போட்டிகளை நடத்தக் கூடாது.

இவ்வாறு இசையமைப்பாளரும் பாடகருமான கேரளா பாலக்காடு ஸ்ரீராம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (03) புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சங்கீதக்காரர்களுக்கு எல்லை இல்லை. பாடல் தெரிவுப் போட்டி தொலைக்காட்சியில் நடத்துவது நல்ல விடயம்தான். ஆனால் தொலைக்காட்சியில் பாடும் போது சங்கீதத்துக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இந்தியத் தொலைக்காட்சிகள் இலாப நோக்கில் இயங்குகின்றன.

போட்டியில் பங்குபற்றும் பாடகர்களை எத்தனையாவது தரத்துக்கு மேலே கொண்டு போகிறோம் என்று சொல்லி உழைக்கும் தொலைக்காட்சிகள் அவர்களின் எதிர்காலம் பற்றி சிந்திப்பதில்லை. வருடத்துக்கு வருடம் பாடல் போட்டிகள் நடைபெறுகின்றன.

இப்படிப் பல போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தில் தெரிவானவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான சங்கீதம் படிக்க வைத்து எதிர்காலத்தில் சிறந்து விளங்க ஆவணம் செய்ய வேண்டும். தொலைக்காட்சி இலாபத்துக்காக இப்படியான போட்டிகளை நடத்தக் கூடாது.



நடுவர்கள் ஜானகி அம்மாவையே அசைக்க வைத்த பாடல் என்று பாடல் போட்டியில் கலந்து கொண்டவரை பெருமை பேசுவார்கள். ஆயிரக் கணக்கில் பாடல்கள் பாடிய ஜானகி அம்மாவையே அசைக்க வைத்த பாடல் என்று எப்படி சொல்ல முடியும். சங்கீதம் படித்து பாடி பிரபல்யமான ஜானகி அம்மாவை முறையாக சங்கீதம் படிக்காதவர்கள் தொலைக்காட்சி பாடல் போட்டியில் கலந்துகொண்டவர்களை ஜானகி அம்மாவை மிஞ்சி விட்டார்கள் என்று எப்படி சொல்வது. தொலைக்காட்சி இலாபத்துக்காக மெருகூட்டி பேசுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பார்க்கிறேன் தவில், நாதஸ்வரம், வாய்ப்பாடு, புல்லாங்குழல் பழகுகிறார்கள். இப்படி அடிப்படையில் இருந்து சங்கீதம் படித்தால்தான் அதற்கு உயிர் இருக்கும். அதைவிட்டு விட்டு 20-20 கிரிக்கெட் போட்டி போல் இந்தா என்பதற்குள் முடிந்துவிடும். ஒரு படம் பார்த்து வெளியே வருவது போல் இருக்கும்.

கடைசி வரை உயிர் மூச்சு இருப்பது போல் சங்கீதம் நிலைக்க வேண்டும் என்றால் முறைப்படி சங்கீதம் படித்து விட்டு பாட வேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பிள்ளை தொலைக்காட்சி ஒன்றின் சரிகம பாடல் போட்டியில் வெற்றிபெற்றமை வரவேற்கத்தக்கது. ஆனால் அந்தப் பிள்ளை முறைப்படி சங்கீதம் படித்து நம்மை தனது எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும்.

நான் நடுவராக பல வருடங்கள் இருந்தேன். அப்போது பாடல் போட்டிக்கு வருகின்றவர்களுக்கு பயிற்சி வழங்கித் தான் பாட விடுவோம். இப்ப என்னவென்றால் பாட்டுப் பாடியதும் தான் திருத்தம் செய்கிறார்கள்.- என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# யாழில் சாத்தானின் வேதம்

யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்தம் - 15 ஆண்டுகள் - முடியப் போகின்றது.

தமிழ் மக்களுக்கு - தமிழர் தேசத்திற்கு - விடிவு ஏதும் கிட்டவேயில்லை. வாய்ப் பேச்சுகளுடன் எல்லாமே முடிவடைந்து விட்டன.

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு குறித்து எதுவும் பேசவே இல்லை. அதைவிட, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வென்று தாம் ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பதுதான் அவருக்கு முக்கியம். அதனால் அந்த அடிப் படையில் அவர் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்டு விட்டுச் சென்று விட்டார் .

என்ன, தமிழ் மக்கள் எல்லோரும் முட் டாள்கள் என்பது போலக் கருதி அவர் இங்கு யாழ் நகரில் பேசிவிட்டுச் சென்ற மைதான் தமிழ் மக்களை விசனத்துக்கு உட்படுத்தி உள்ளது.

மாகாண மட்டத்தில் வலுவான பொரு ளாதரத்தைக் கட்டி எழுப்ப அரசமைப் பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை என்று யாழ்ப்பாண மக்களுக்கு "அரசியல் பாடம்" எடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்று மாலை யாழ் மாவட்டத் தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது இந் தத் தத்துவத்தைப் பிளந்து இருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதியான அதிஉத்தமர். "மாகாண மட்டத்தில் உள்ள பொருளா தாரத்தைக் கட்டி எழுப்ப அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவை. எனவே அவற்றில் அரசாங்கம் தலையி டாது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தங்களது மாகாணத்தின் அபிவிருத்திக் காக அனைத்து மாகாணங்களும் தொடர்ச்சி யாகப் பயன்படுத்த வேண்டும்." - என்று அவர் யாழ்ப்பாணத்தில் உபதேசித்திருக் கிறார்.

அவரது இந்த உபதேசம் தமிழர்களைப் பொறுத்தவரை "சாத்தான் வேதம் ஓது வதற்கு" ஒப்பானது. தமிழர்களுக்கு முதல் - அத்தியாவசிய - தேவை 75 ஆண்டு கால மாக நீடிக்கும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு. அது குறித்து ஏதும் பேசாமல் பொருளாதார அபிவிருத்தி பற்றி தத்துவமுரைக்க யாழ்ப்பாணம் வந்தி ருக்கிறார் நாட்டின் அதிஉத்தமர்.

அதற்கும் கூட இனப்பிரச்சினைக்கத் தீர்வு என்ற பெயரில் முன்மொழிக்கப்பட்ட 13 ஆம் திருத்தத்தை தான் அவர் கையில் எடுத்திருக்கின்றார். அரசமைப்பில் உள்ள 13 ஆம் திருத்தத்தை - அரசமைப்பை - நடைமுறைப்படுத்தவே வக்கற்ற - திராணி யற்ற - முதுகெலும்பற்ற - நாட்டின் ஜனா திபதி, அதன் அரைகுறை நடைமுறையாக் கத்தை நியாயப்படுத்தி, தமிழர்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றார்.

அந்த 13 ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபை கூட நாட்டில் நடைமுறை யில் இல்லை. யுத்தம் முடிந்த இந்த 15 ஆண்டுகளில் 5 வருடங்கள்தான் மக்க ளால் தேர்வு செய்யப்பட்ட மாகாண சபை வடக்கில் இருந்திருக்கின்றது. மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டு இந்த 35 வருட காலத்தில் சுமார் ஏழரை வருடங் கள்தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை முறையை வடக்கு மக்கள் கண்டிருக்கிறார்கள்.

அந்த முறைமைக்கே - மாகாண மட்டத் தில் மக்களாட்சி முறைமைக்கே - ஆப்ப டித்து, அதைக் குழப்பி விட்டு விட்டு, அதனை உடனடியாக மீண்டும் நடை முறைப்படுத்துவதற்கான முழு வாய்ப்புக் களும் இன்று வரைத் திறந்தே இருந்த போதும் கூட, அதை எதையுமே செய்யா மல் இருந்து கொண்டு, மாகாண ஆட்சி முறைமை மூலமான பொருளாதார அபி விருத்தி குறித்து வடக்கே வந்து உபதேசம் செய்கின்றார் வெட்கம் இல்லாத இந்த ஜனாதிபதி ரணில்.

அப்படி அவர் இங்கே வந்து கூறுவதற்கு வடக்கு மக்களை அவர் என்ன முழு முட் டாள்கள் என்று நினைத்து விட்டாரா?

அப்படி அவர் நேற்றைய கூட்டத்தில் கூறிவிட்டு எழுந்து சென்று விட்டார். அவர் தொடர்ந்து இருந்திருந்தால் யாழ். தொழில் முயற்சியாளர் கூட்டத்திலிருந்த ஒருவராவது நாம் குறிப்பிடும் இந்த கேள்வி களை நாக்கைப் பிடுங்குமாறு போல அவரிடம் கேட்டிருப்பர் என்பது நிச்சயம்.

மாகாண நிர்வாகங்களை சுயாதீனமாக இயங்க விட்டால் - வெளிநாடுகளிடமும் வெளிநாட்டில் உள்ள நமது புலம்பெயர் சமூகத்தினரிடமும் உதவிகளை பெறுவ தற்கு மத்தியின் தலையீடு இல்லாத அனு மதி இருக்குமானால் - கொழும்புக்கே பொருளாதார அபிவிருத்தி குறித்துப் பாடம் படிப்பிக்கும் வகையில் பலமான பொருளாதார எழுச்சியை வடக்கு மாகா ணம் முற்கொண்டு செல்லும்.

ஆனால் பௌத்த - சிங்கள பேரினவாத வெறிக் கட்டமைப்பில் அமைந்த கொழும்பு ஆட்சி பீடம் அதற்கு எப்போ துமே இடம் அளிக்காது என்பதுதான் நிதர்சனமான உண்மை.



# பளுதூக்கல் சாதனை வீரர் புசாந்தனுக்கு நேரில் சென்று மதிப்பளித்த சிறிதரன் எம்.பி!

சர்வதேச மற்றும் தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டிகளில் அபார சாதனைகளை நிலைநாட்டியுள்ள, யாழ்ப்பாணம், தென்மராட்சியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தனை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார்.

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற ஆசிய கிளாசிக் பவர்லி ஃப்டிங் சம்பியன்ஷிப் பளுதூக்கல் போட்டியில் பங்கேற்ற புசாந்தன், இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றிருந்தார்.

இந்நிலையில், அண்மையில் பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற தேசிய ரீதியிலான பளுதூக்கல் போட்டியில் கலந்து கொண்டு, மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்கேற்று மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார்.

120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோ கிராமையும்,



benchpress பிரிவில் 175 கிலோ கிராமையும், deadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார். அத்துடன், குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

இந்நிலையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நேரில் சென்று வாழ்த்தி மதிப்பளித்துள்ளார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் யாழ். வீராங்கனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம், காரைநகரின் அமுர்தா சுரேன் குமார் இங்கிலாந்து இளம் மகளிர் கிரிக்கெட் அணியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

இலங்கையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான 17 வயதான அமுர்தா சுரேன்குமார், இங்கிலாந்தின் இளம் மகளிர் கிரிக்கெட் அணியின் பயிற்சிக் குழாமில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த சுரேன் குமார் – லோஹினி தம்பதியரின் மூத்த மகளான இவர், இங்கிலாந்தைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீராங்கனையுமாவார்.

இவர் அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முத்தரப்பு கிறிக்கெட் தொடரில் இங்கிலாந்து இளம் மகளிர் அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தவுள்ளார்.



தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 20 வீராங்கனைகளைக் கொண்ட பயிற்சிக் குழாமில் சகலதுறை வீராங்கனையாக அமுர்தா பெயரிடப்பட்டுள்ளார்.




# வவுனியா விமானப் படைத் தளத்தை புகைப்படம் எடுத்த இளைஞன் கைது!

(கி.வசந்தரூபன்)

வவுனியா விமானப் படைத் தளத்தைப் புகைப்படம் எடுத்த தாகச் சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

இன்று (05) வவுனியா விமானப்படை தளத்தில் ஜனாதிபதி விசேட விமானத்தில் வருகை தந்து வன்னி அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ள நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் பாதுகாப்பு வாகனத் தொடரணி சென்று கெண் டிருந்த நிலையில் அதனை இளைஞர் ஒருவர் புகைப்படம் எடுத் துள்ளார். இதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் குறித்த இளைஞனை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள் ளனர்.

அந்த இளைஞன் பூனாவ பகுதியைச் சேர்ந்த பைருஸ் பவாஹிர் என்பவராவார்.

இவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண் டுள்ளனர்.




# மத்திய தபால் பரிவர்த்தனை ஊடாக அனுப்பப்பட்ட போதைப் பொருள் மீட்பு!

மத்திய தபால் பரிவர்த்தனை ஊடாக பல்வேறு நபர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதைப் பொருள் தொகுதி சுங்க பிரிவால் கைப் பற்றப்பட்டுள்ளது.

ஜேர்மனி மற்றும் பிரித்தானியாவில் இருந்து மத்திய தபால் பரிவர்த்தனைக்கு அனுப்பப்பட்ட 11 பொதிகளில் சுமார் ஒன்றரை கோடி ரூபா பெறு மதியான போதைப் பொருள் இருந்தது என்று சுங்க ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

அந்த பொதிகளில் எக்ஸ்டசி, மெத்தாம் பெட்ட மைன், 318 கிராம் குஷ் மற்றும் 15 கஞ்சா விதை கள் அடங்கிய 1,055 மாத்திரைகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

இந்தப் போதைப்பொருள், மேலதிக விசா ரணைகளுக்காகப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிமெந்தின் விலையும் அதிகரித்தது!



50 கிலோ சிமெந்துப் பொதி யொன்றின் விலையானது 150 ரூபா வால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சிமெந்து உற்பத்தியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

இதன் மூலம், 50 கிலோ சிமெந் துப் பொதியொன்றின் புதிய விலை 2 ஆயிரத்து 450 ரூபாவாக அதிகரித் துள்ளது.

நாட்டில் வற் வரி அதிகரிக்கப்பட் டுள்ள காரணத்தாலேயே சிமெந்தின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சிமெந்து உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விலை அதிகரிப்பானது நியாயமற்றது என்று தேசிய கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சுபுன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

வற் வரியானது அதிகரித்துள்ள அதேவேளை சிமெந்து பொதியின் விலை அதிகரிப்பானது வரி அதிகரிப்பு சத வீதத்தை விட அதிகமாக உள்ளது என் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து, கட்டுமான உபகரணங்க ளின் விலையும் வருகின்ற நாள்களில் அதிகரிக்கும் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# விமான நிலைய அதிகாரிகள் 28 பேருக்குக் கட்டாய விடுமுறை

28 விமான நிலைய கூட்டு நிபுணத் துவ தொழிற்சங்க தலைவர் உட்பட 28 அதிகாரிகளை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் கட்டாய விடுமுறை வழங்கி அனுப்பியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சேவைகளை சீர்குலைக் கும் நோக்கத்துடன் இந்தத் தொழில் சங்கத்தின் செயலாளர் ஜனவரி 2 ஆம் திகதி இலங்கையில் விமானப் பயண சேவைகளை வழங்கும் விமான நிறு வனங்களுக்கும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத் துக்கும் அனுப்பியதாக கூறப்படும் கடிதத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது சட்ட மற்றும் தார்மீக நியாயம் இல்லாத தேவையற்ற நடவடிக்கை என்று கருதிய நிறுவனத் தலைவர், முறையான விசாரணை அடிப்படை யில் குறித்த 28 பேரையும் உடனடியாக கட்டாய விடுப்பில் அனுப்பும் முடிவைச் செயற்படுத்தினார்.

விசாரணைகள் முடியும் வரை விமான நிலையம் மற்றும் விமான நிறுவனங் களின் எந்தவொரு வளாகத்துக்கும் இந்த அதிகாரிகள் அணுகுவது தடை செய்யப்படும் என்று நிறுவனத் தலை வர் குறிப்பிட்டுள்ளார்.



# சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் அரசியல் பிளவு தோன்றியது

## அரசியல் நிலவரங்களை ஆராயும் 'த டிப்ளோமெட்' சஞ்சிகை சுட்டிக்காட்டு

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏறக்குறைய 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள இந்த காலகட்டத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் அரசியல் பிளவுகள் தோன்றியுள்ளன என்று 'த டிப்ளோமெட்' என்ற ஆசிய பசுபிக் அரசியல் நிலவரங்களை ஆராயும் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக இலங்கை அரசு செய்த போர்க் குற்றங்களுக்காக நீதி மற்றும் பொறுப்புக் கூறலைக் கோரி வரும் தமிழ் புலம்பெயர் குழுக்களிடையேயும் அரசியல் பிளவுகள் ஆழமாகியுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்ததாகக் கூறி இலங்கை அரசால் தடுப்புப் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த, ஒரு காலத்தில் அதிகாரம் பெற்ற தமிழ் குடை அமைப்பான உலக தமிழர் பேரவை, பௌத்த தூதுக் குழுவுடன் இணைந்து வெளியிட்ட 'இமாலய பிரகடனம்' இந்த பிளவை அதிகரித்துள்ளது என்று 'டிப்ளோமெட்' சுட்டிக்காட்டியுள்ளது.

இது தமிழ் மக்கள் மத்தியிலும் பதற்றதை தோற்றுவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த பிரகடனம் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல நடவடிக்கைகளை பரிசீலிப்பார் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். பிரகடனம் எளிமையானது மற்றும் ஆறு கருப்பொருள்களை பகுதிகளை உள்ளடக்கியது.

இருப்பினும், பிரச்சினைகளின் மிகவும் சர்ச்சைக்கு உரிய முக்கிய பகுதிகள் அதில் சேர்க்கப்படாமை, குறித்த பிரகடனம், தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற உந்துதல் பெற்ற அரசியல் சூழ்ச்சி என்று பலரும் விமர்சனம் வெளியிட்டுள்ளது என்று 'டிப்ளோமெட்' மேலும் குறிப்பிட்டுள்ளது.



# திருகோணமலையில் விபத்தில் காயமடைந்தவர் இன்று உயிரிழப்பு

திருகோணமலை – உட்துறைமுக வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கிக் கபாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அந்த நபர் இன்று (05) உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர், கடந்த முதலாம் திகதி வீதியை கடக்க முற்பட்டபோது மூதூர் டிப்போவுக்கு சொந்தமான பஸ் மோதியதில் படுகாயமடைந்தார்.

இந்த நிலையில் அவர் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் திருகோணமலை கஸ்தூரி நகரைச் சேர்ந்த கருப்பையா கருணாநிதி (43 வயது) என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, உயிரிழந்தவரின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனாதிபதி உண்மை நல்லிணக்கக் குழு திருமலை சர்வ மத ஒன்றியம் சந்திப்பு!

(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை மாவட்ட சர்வ மத ஒன்றியத்தினருக்கும் மற்றும் ஜனாதிபதியின் உண்மை நல்லிணக்க பொது முறைக்கான கொள்கை பிரிவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம் பெற்றது.

திருகோணமலையிலுள்ள எகெட் கரித்தாஸ் அலுலகத்தில் நேற்று (04) அருட்தந்தை டாக்டர் போல் றொபின்ஷன் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது.

சர்வமத ஒன்றிய செயலாளர் முஹம்மத் றிஸ்மி இந்த நிகழ்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். திருகோணமலை மாவட்டத்தில் இன நல்லிணக்கத்துக்குப் பாதகமான காரணிகளையும் தெளிவு படுத்தினார்.

பத்திர காளியம்மன் ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள் கருத்து தெரிவிக்கையில், எமது மாவட்டத்தில் மூவின மக்களும் சமாதானமாகவும் நல்லிணக்கத்தோடும் வாழ்கின்றோம். இருந்த போதும் இதனைச் சீர்குலைப்பதற்கு வேறொரு சக்திகள்



இங்கு இயங்குவதை அவதானிக்க முடிகிறது.- என்றார்.

அத்துடன் மௌலவி ஹதியத்துல்லா கருத்துத் தெரிவிக்கையில், தற்போதைய காலப் பகுதியில் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி இளைஞர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி காணப்படுகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமானால் சட்டம் ஒழுங்கு சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தற்பொழுது இயங்கி வரும் யுத்திய செயற்திட்டம் மேலும் வலுப்பெற வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளாக டாக்டர் அசங்க குணவன்ச மற்றும் டாக்டர் யுவி தங்கராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அவர்கள் திருகோணமலை மாவட்ட அரச அதிபர், திருகோணமலை மறை மாவட்ட ஆயர், திருமலை மாவட்ட சர்வ மதத் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

# வெருகல் பிரதேச செயலர் பிரிவில் 265 குடும்பங்களுக்கு உலருணவு

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி வழங்கியது

மழை வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, வட்டவன் கிராமத்தின் 265 குடும்பங்களுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் உலருணவு மற்றும் மருத்துவ பொருள் பொதிகளை நேற்று முன்தினம் (3) வழங்கினர்.

கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் தமது வீடுகளில் இருந்து வெளியேறிய 115 குடும்பங்கள் வட்டவன் மகா வித்தியாலயத்திலும்,150 குடும்பங்கள் வெருகல் இந்து மகா வித்தியாலயத்திலும் தஞ்சமடைந்துள்ளன்.

கிராமம் முழுவதும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் தரைப்போக்குவரத்து இந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஸ்ரீ பிரசாத் மற்றும் நிர்வாகிகள் மக்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கினர்.

முட்டிச்சேனை, கல்லடி, வாழைத்தோட்டம் கிராமங்களைச் சேர்ந்த மேலும் 400 குடும்பங்களுக்கும் தாம் உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர் என்று ஸ்ரீபிரசாத் கூறினார்.








# தெற்காசிய சிலம்பப் போட்டியில் யாழ். இந்துவுக்கு 3 வெண்கலம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தரம் 7 மாணவன் சிதம்பரநாதன் அரூஸன், தெற்காசிய சிலம்பப் போட்டியில் மூன்று பிரிவுகளில் கலந்து மூன்றிலும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.

உலக யூனியன் சிலம்பம் சம்மேளனம் நடத்திய 11 ஆவது தெற்காசிய சிலம்பம் சம்பியன்சிப் சுற்றுப் போட்டி அண்மையில் கொழும்பு ரோயல் மாஸ் எரேனாவில் இடம்பெற்றது.

இதில் தனிக்கம்பு, இரட்டைக் கம்பு மற்றும் நேரடி சண்டை ஆகிய மூன்று போட்டிகளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் சிதம்பரநாதன் அரூஸன் கலந்து கொண்டு மூன்று போட்டிகளிலும் மூன்றாம் இடங்களைப் பெற்று மூன்று வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டார்.



# கேசல்கமுவ ஓயாவில் மாணிக்ககல் அகழ்வு!

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

காசல் ரீ நீர்தேக்கத்துக்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் உள்ள கேசல்கமுவ ஓயாவில் இனந்தெரியாதவர்களால் சட்ட விரோத மாணிக்கக் கல் அகழ்வு இடம் பெற்று வருகிறது என்று பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காசல்ரீ நீர் தேக்கம் மற்றும் கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உப மின் நிலயத்துக்கு கேசல்கமுவ ஓயாவில் இருந்து இந்த நீர் கொண்டு செல்லப்படுகிறது.

இருந்த போதிலும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவுத் தோட்டப் பகுதியில் உள்ளவர்களே இந்த பிரதேசத்தில் இரவு நேரங்களில் இந்த சட்ட விரோத மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சட்ட விரோத மாணிக்கக் கல் அகழ்வால் குறித்த கேசல்கமுவ ஓயாவின் நீரை அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் இந்த சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொள்ளவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பாதிக்கப்பட்ட வெருகல் மக்களை பார்வையிட்டார் கிழக்கு ஆளுநர்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வெருகல் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 320 குடும்பங்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள நேற்று முன்தினம் புதன் கிழமை உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர்.

கடந்த வாரம் முழுவதும் வெருகல் பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் கிராமத்தில் கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது.

பிரதேசத்தின் 320 குடும்பங்களைச் சேர்ந்த 968 பேர் வெள்ள பாதிப்புக்கு உள்ளாகினர். வெள்ளப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு ‘அகம்’ தன்னார்வ அமைப்பு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கான அனுசரணையை வழங்கியது.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்த ஆளுநர் தலைமையிலான குழுவினர் அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்ற உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினர்.










# வெள்ளவத்தை இந்து பெண்கள் கல்லூரியில் திறன் விருத்தி வகுப்பறை திறந்து வைப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கொழும்பு, வெள்ளவத்தை இந்து பெண்கள் (சைவ மங்கையர்) கல்லூரியின் க.பொ.த. சாதாரணதர மற்றும உயர்தர மாணவிகளின் நவீன கற்றல் வசதிகளை மேம்படுத்தும் வகையில் திறன் விருத்தி வகுப்பறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விஷன்ஸ் நிறுவன தலைவர் என்.தெய்வேந்திரராஜா, பிரதான நிறைவேற்று அதிகாரி ஏ.மையூரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரி மாணவர் கரம் போட்டியில் சாதனை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மலையக பகுதியில் கரம் விளையாட்டு துறையை மேம்படுத்தும் வகையில் மெரினாஸ் விளையாட்டு கழகம் ஏற்பாடு செய்திருந்த திறந்த கரம் போட்டி மெராயா தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 50 விளையாட்டு கழகங்கள் பங்கு பற்றியன. தனி நபர் போட்டியில் எஸ் .டிலான் முதலாமிடத்தையும், பி. கபிலாசும் இரண்டாம் பெற்றனர்.

இரட்டையர் போட்டியில் பங்குபற்றிய ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரி மாணவர்களான புஷ்பராஜ் துவாரக்ஷான், சிவகுமார் பிரகதீஸ் ஆகிய இருவரும் இணைந்து மிகவும் சிறப்பாக விளையாடி அனைத்து சுற்றிலும் வெற்றிப்பெற்று, இறுதி சுற்றுக்கு தெரிவாகி பார்வையாளர்களின் அமோக வரவேற்புடன் 2023 ஆண்டுக்கான சாம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டனர்.

இந்த நிகழ்வில் மெராயா பாடசாலை அதிபர் என் கிருஷ்ணராஜ் கலந்து கொண்டார். இப்போட்டியை மிகவும் மிகவும் சிறப்பான முறையில் வீ.விஷ்வநாத், யூ.கிருஷ்ணா, ரீ. கிருஷ்ணகுமார், எஸ். மினோசன் ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர்.



# பெரிய ராணிவத்தை தோட்டத்தில் மூன்று வீடுகள் தீக்கிரையாகின

(மஸ்கெலியா நிருபர்)

லிந்துலை, பெரிய ராணிவத்தை தோட்டத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 வீடுகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

9 ஆம் இலக்கம் லயன் குடியிருப்பிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 10 லயன் அறைகள் குறித்த நெடுங்குடியிருப்பு தொகுதியில் உள்ளன.

பொது மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பான விசாரணை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், சொத்துகள் சேதம் அடைந்துள்ளன.

# கல்பிட்டி தலுவ கிராம மக்களிடம் நிதி சேகரித்து வீடமைத்து வழங்கல்





(அரபாத் பஹுர்தீன்)

குடும்பங்களை பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த 02 ஆம் திகதி கல்பிட்டி பிரதேச தலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்று கல்பிட்டி பிரதேச செயலாளர் எஸ்.எம்.பி. நந்தசேனவால் வழங்கப்பட்டது.

கல்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலுவ கிராம சேவகர் பிரிவிலுள்ள போதைப் பாவனையில் இருந்து புனர்வாழ்வு பெற்ற குடும்பத் தலைவர் ஒருவரின் குடும்பம் ஒன்றுக்கு இந்த வீடு கையளிக்கப்பட்டது.

இந்த விடு சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியானதாகும். இந்த 8 லட்சம் ரூபா பணமும் தலுவ கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இதற்கான பூரண முயற்சியைக் கல்பிட்டி பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரான ஜவந்த மேற்கொண்டிருந்தார்.

அந்தக் குடும்பத்திலுள்ள சிறுவர்களை கவனித்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகளையும் கல்பிட்டி பிரதேச செயலக சிறுவர் நலப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் உயர்வால் 3 வான் கதவுகள் திறப்பு!

(பழுவூரான்)

உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட உயர்ந்ததால் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் மூன்று வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதனால் உன்னிச்சை, ஆயித்தியமலை மற்றும் அதனை அண்டிய கிராமங்களின் தாழ்வான பிரதேசங்கள் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றன.



இதனை அவதானிப்பதற்கான மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருகின்றனர்.

அத்தோடு நீரோட்டத்தில் இந்தப் பிரதேச மக்கள் மீன் பிடித்து வருகின்றனர்.

# தமிழகத்திடம் பெற்ற வரியை விட கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது

## – நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு



தமிழகத்திடம் இருந்து பெற்ற வரியை விட மத்திய அரசு கூடுதல் நிதியை கொடுத்துள்ளது என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாம்பலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழகத்துக்கு மத்திய அரசு ஒன்றுமே கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். தமிழகத்துக்கு மத்திய அரசு நிறைய கொடுத்துள்ளது. 4 வந்தே பாரத் ரயில்கள் தமிழகத்தில் இயக்கப்படுகின்றன.

2014 - 2023 வரை தமிழகத்தில் இருந்து மத்திய அரசு பெற்ற வரி 6.23 லட்சம் கோடி ரூபா . அதேநேரம் தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கிய நிதி 6.96 லட்சம் கோடி ரூபா. தமிழகத்தில் இருந்து பெற்ற வரியைவிட கூடுதலாகவே நிதி கொடுத்துள்ளோம். தமிழகம், கேரளா உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் மாதம் தோறும் தவறாமல் நிதி கொடுத்து வருகிறோம்.

இன்னொன்று, மத்திய அரசு செஸ் வரியை வசூலித்து தமிழகத்துக்கு எதுவுமே கொடுக்கவில்லை என்கிறார்கள். பல முறை சொல்லிவிட்டேன். செஸ் வரியை கொண்டு பாடசாலை கட்டுவது போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. அப்படியாக, தமிழகத்துக்கு மொத்தமாக செஸ் வரி மூலமாக 2014-15 முதல் இன்றுவரை 57,557 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழகத்துக்கு தேசிய நெடுஞ் சாலைகள் அமைப்பதற்கு 37,965 கோடி ரூபாய் கொடுத்துள்ளோம். அதேபோல் பாடசாலைகள் கட்டுவதற்காக, 11,116 கோடி ரூபாயும், கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்காக 4,839 கோடி ரூபாயும் கொடுத்துள்ளோம், கிராமங்களில் சாலை அமைக்கும் திட்டத்துக்கு 3,637 கோடி ரூபாய் என செஸ் வரியாக வசூல் செய்ததை தமிழகத்துக்கு மத்திய அரசு கொடுத்துள்ளது.

வரிகளில் இருந்து எந்த மாநிலங் களுக்கு எவ்வளவு நிதி கொடுக்க வேண் டும் என்பதை நிர்ணயம் செய்வது நிதி ஆணையம்தான். தமிழ்நாட்டின் மேல் விரோத மனப்பான்மை உடன் கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமல் இருந்தது இல்லை.

ஒவ்வொரு மாதமும் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய நிதி சரியாக கொடுக்கப்பட்டு வருகிறது. அதுதவிர சில மாதங்களில் முன்கூட்டியே நிதி ஒதுக்கப்படுகிறது" - என்றார்.

# எல் 1 புள்ளியை அடைகிறது இந்தியாவின் ஆதித்யா விண்கலம்!



சூரியனை ஆய்வு செய்வதற்காக விண்ணுக்கு செலுத்தப்பட்டுள்ள ஆதித்யா- எல் 1 விண்கலம் நாளை அதன் எல் 1 புள்ளியை அடைய உள்ளது என இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவின் தலைவர் எஸ். சோமநாத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரோவின் முதல் சூரிய திட்டமான ஆதித்யா எல் 1 நாளை இறுதி சுற்றுவட்டப்பாதையில் செலுத்தப்பட உள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஆதித்யா எல் 1 விண்கலம், அதன் இலக்கை அடைந்து நாளை மாலை அதன் இறுதி சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டு தமது இறுதி இலக்கை அடைந்ததும், கிரகங்கள் இல்லாமல் சூரியனைக் காண முடியும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 2 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம், பூமியை நான்கு முறை சுற்றும் ஒத்திகைகளை வெற்றிக ரமாக மேற்கொண்டதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

# விஜய் மீது பாதணி வீச்சு: பொலிஸில் முறைப்பாடு பதிவு

நடிகர் விஜய் மீது பாதணி வீசப்பட்ட விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி கோயம்பேடு பொலிஸ் நிலையத்தில் விஜய் மக்கள் இயக்கம் புகார் அளித்துள்ளது.

இது தொடர்பாக விஜய் மக்கள் இயக்கத்தின் தென் சென்னை மாவட்ட தலைவர் தி.நகர் க.அப்புனு நேற்று அளித்த புகார் மனுவில்,

"மறைந்த நடிகர் விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்த கடந்த 28 ஆம் திகதி இரவு நடிகர் விஜய் கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் திருமண மண்டபத்துக்கு வருகை தந்தார்.

அப்போது, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் விஜய்யை நோக்கி பாத ணியை வீசியுள்ளார்.

இந்த செயலில் ஈடுபட்ட, அந்த நபரைக் கண்டுபிடித்து அவர் மீதுசட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலி ஸார் விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

# செங்கடலில் மீண்டும் பதற்றம்: அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்!



செங்கடலில் பதற்றத்தை ஏற்படுத்திவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா கடுமையாக எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் அவர்கள் மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

செங்கடலில் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தாவிட்டால், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா தலைமையிலான 12 நாடுகள் கூட்டாக எச்சரித்திருந்தன, இது இறுதி எச்சரிக்கை எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இந்த எச்சரிக்கையையும் மீறி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் தாக்குதலை நடத்துகின்றனர், நேற்று செங்கடலில் ஆளில்லா படகை வெடிக்கச் செய்துள்ளனர்.

செங்கடலில் சுமார் 50 கி.மீ. தூரம் ட்ரோன் படகை அனுப்பி, ஆழ்கடலில் சரக்கு கப்பல்கள் வரும் பாதைகளில் வெடிக்கச் செய்ததாக அமெரிக்க கடற்படை தலைமை அதிகாரி பிராட் கூப்பர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"வணிகக் கப்பல்கள் மற்றும் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் செல்லும் கடற்பகுதியில் இருந்து 2 மைல் தொலைவுக்குள் இந்த சம்பவம் நடந்துள்ளது.

ட்ரோன் படகு வெடிப்பதை நாங்கள் அனைவரும் பார்த்தோம். அவர்கள் குறிவைத்த இலக்கு என்ன என்பது தெரியவில்லை.

தெற்கு செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவை கடக்கும் வணிக கப்பல்களுக்கு எதிராக ஹவுதி கிளர்ச்சியாளர்களால் 25 முறை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, அவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் குறைவதற்கான அறிகுறியே இல்லை" என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே இடம்பெறுகின்ற போரில் ஏமன் நாட்டை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக, காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் இராணுவ தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் சரக்கு கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வீசும் ஏவுகணைகளை அமெரிக்க இராணுவம் கடலிலேயே தகர்த்து அழித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈரான் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்பு

ஈரானில் நடத்தப்பட்ட இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு ஐ.எஸ் அமைப்பு (இஸ்லாமிய அரசு அமைப்பு) உரிமை கோரியுள்ளது.

ஈரானில் அமெரிக்காவின் ஆளில்லா விமான தாக்குதலில் கொல்லப்பட்ட காசிம் சுலைமானியின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஈரானில் மக்கள் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

தெற்கு ஈரானில் உள்ள கெர்மான் நகரில் நடந்த தாக்குதலில் 84 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

எனினும் ஈரான் இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் இறந்தவர்களின் எண்ணிக்கை 95 ஆக அதிகரித்து காணப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் அமெரிக்காவும் இஸ்ரேலும் இருந்திருக்க வேண்டும் என்று ஈரான் முதலில் கூறியது.



எனினும், டெலிகிராம் பதிவின் மூலம் தாக்குதலுக்கான உரிமையை ஐ.எஸ் அமைப்பு கோரியுள்ளது.

மேலும், ஐ.எஸ் அமைப்பின் செய்தி நிறுவனம் முகமூடி அணிந்த இரண்டு நபர்களைக் காட்டும் ஒரு படத்தை வெளியிட்டதோடு, அவர்களே தாக்குதல்களுக்கு காரணம் என்றும் கூறியுள்ளது.